# மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை

## மானியக் கோரிக்கை - 19

# அறிவிப்புகள்
# 2023 - 2024


## திரு. மா. சுப்பிரமணியன்

மருத்துவம் மற்றும் மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர்

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| I. | இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்- 48 திட்டம் | 3 - 12 |
| II. | மக்களைத் தேடி மருத்துவம் | 15 - 20 |
| III. | மருத்துவக் கட்டமைப்புகள் | 23 - 37 |
| IV. | புற்றுநோய் மருத்துவ சேவைகள் | 41 - 44 |
| V. | நகர்ப்புற நல வாழ்வு | 47 - 50 |
| VI. | மகப்பேறு மருத்துவ சேவைகள் | 53 - 58 |
| VII. | பச்சிளங்குழந்தை பராமரிப்பு சேவைகள் | 61 - 71 |
| VIII. | வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள் | 75 - 76 |
| IX. | சிறுநீரக பராமரிப்பு சேவைகள் | 79 - 82 |
| X. | மனநல மருத்துவ சேவைகள் | 85 - 87 |
| XI. | பார்வையிழப்பு தடுப்பு சேவைகள் | 91 - 93 |
| XII. | பல் மருத்துவ சேவைகள் | 97 - 98 |
| XIII. | சிறப்பு மருத்துவ சேவைகள் | 101 - 114 |
| XIV. | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி | 117 - 124 |
| XV. | உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து மேலாண்மை | 127 - 131 |
| XVI. | சுகாதார மருத்துவ மேலாண்மை சேவைகள் | 135 - 142 |
| XVII. | சுகாதார விழிப்புணர்வு சேவைகள் | 145 - 148 |

# I - இன்னுயிர் காப்போம்,
# நம்மைக் காக்கும் - 48 திட்டம்

**1. நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தலா 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Block) ரூபாய் 95 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

"இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் - 48" திட்டத்தினை மேலும் வலுப்படுத்தும் விதமாக திருவொற்றியூர் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை- ஓட்டேரி, சென்னை அரசு மனநல காப்பகம்-கீழ்ப்பாக்கம், கன்னியாகுமரி மற்றும் கடலூர்- சிதம்பரம் ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தலா 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Blocks) ரூபாய் 95 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**2. இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Block) ரூபாய் 40.05 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

தமிழ்நாட்டு மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் " இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் - 48" திட்டத்தின் கீழ், சென்னை - இராயபேட்டை அரசு மருத்துவமனைக்கு 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Block) ரூபாய் 40.05 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

3. **ஐந்து அரசு மருத்துவமனைகளில், 50 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (Critical Care Blocks) ரூபாய் 118.75 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் - 48 திட்டத்தினை மேலும் வலுப்படுத்தும் விதமாக நாமக்கல் மாவட்டம் – பரமத்தி வேலூர், இராணிப்பேட்டை மாவட்டம் - அரக்கோணம், விருதுநகர் மாவட்டம் - சிவகாசி, தருமபுரி மாவட்டம் – அரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் – உளுந்தூர்பேட்டை ஆகிய 5 அரசு மருத்துவமனைகளில், 50 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (Critical Care Blocks) ரூபாய் 118.75 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

## அவசரகால ஊர்திகளும், நவீன மருத்துவக் கருவிகளும்

4. 108 அவசர கால ஊர்திகளின் சேவையை வலுப்படுத்த ரூபாய் 21.40 கோடி மதிப்பீட்டில் 62 புதிய அவசர கால ஊர்திகள் (BLS), 13 தாய் சேய் நல ஊர்திகள் (JSSK) மற்றும் நவீன மருத்துவ கருவிகள் (92 Transport Ventilator) வழங்கப்படும்.

தமிழ்நாட்டில், தற்பொழுது 1,353 அவசர கால ஊர்திகள் மற்றும் 99 தாய்-சேய் நல ஊர்திகள் (JSSK) செயல்பட்டு வருகிறது. அவற்றில் 62 கழிவு நீக்கம் செய்யப்பட்ட (Condemnation) அவசர கால ஊர்திகளுக்கு பதிலாக புதிய அவசர கால ஊர்திகளும், 13 தாய் சேய் நல ஊர்திகளும் (JSSK) மற்றும் 98 புதிய நவீன மருத்துவ கருவிகள் (Transport Ventilator) ரூபாய் 21.40 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

## நரம்பியல் துறைக்கு நவீன உபகரணங்கள்

**5. 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 8.80 கோடி மதிப்பீட்டில் நவீன நரம்பியல் அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் வழங்கப்படும்**

விபத்து காய மூளை நரம்பியல் அறுவை சிகிச்சைக்கான உயர் நுண்ணிய உபகரணங்கள் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம், தஞ்சாவூர், தருமபுரி, புதுக்கோட்டை, தேனி, திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம் ஆகிய 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 8.80 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

6. **செங்கம் அரசு மருத்துவமனையில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான உபகரணங்களுடன் கூடிய கட்டடம் அமைக்கப்படும்.**

திருவண்ணாமலை மாவட்டம் - செங்கம் அரசு மருத்துவமனையில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு தேவையான நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

7. **ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டிலான புதிய சி.டி ஸ்கேன் (CT Scan) கருவி வழங்கப்படும்.**

"இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் - 48" திட்டத்தின் கீழ் உயிர் காக்கும் அவசர சிகிச்சையை உரிய நேரத்தில் வழங்கிட ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் புதிய சி.டி ஸ்கேன் (CT Scan) கருவி வழங்கப்படும்.

8. தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு விஷமுறிவு சிகிச்சைக்கான Plasmapheresis உபகரணம் வழங்கப்படும். மேலும், கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விஷமுறிவு அவசர சிகிச்சைக்கான மாநில பயிற்சி மையம் அமைக்கப்படும். பாம்புக்கடி நஞ்சுமுறிவு சிகிச்சைக்கான பயிற்சிகள் மாநில அளவில் மருத்துவப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதோடு, அனைத்து கிராமங்களிலும் தன்னார்வலர்களுக்கு முதலுதவி பயிற்சிகள் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் நஞ்சு உட்கொள்ளுவதால் ஏற்படும் பாதிப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய நஞ்சுமுறிவு சிகிச்சை (Plasmapheresis) குறித்த பயிற்சி அளிப்பதற்கு கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாநில அளவிலான பயிற்சி மையமாக மேம்படுத்தப்படுவதோடு, தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு Plasmapheresis உபகரணம் வழங்கப்படும். மேலும், "பாம்புக்கடி தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான சிறப்பு

வழிகாட்டல் குழு" அமைக்கப்பட்டு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பாம்புக்கடி அவசர மருத்துவ உயிர் காக்கும் சிகிச்சை முறைகளுக்கான பயிற்சியும், அனைத்து கிராமங்கள் அளவில் தன்னார்வலர்களுக்கு முதலுதவி குறித்த பயிற்சிகளும் வழங்கப்படும்.

9. திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு புதிய சி- ஆர்ம் கருவிகள் மற்றும் பழநி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு புதிய டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு புதிய சி-ஆர்ம் கருவிகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்டம் - பழநி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு புதிய டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் வழங்கப்படும்.

# II -மக்களைத் தேடி மருத்துவம்

## 10. அத்தியாவசிய மற்றும் சிறப்பு மருந்துகளுக்கு ரூபாய் 25 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாட்டில் மகத்தான "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின் மூலம் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் மூலம் தொற்றா நோய்களால் ஏற்படும் நோய்ச்சுமையை குறைக்கும் வண்ணம் ஒருங்கிணைக்கப்பட்ட முழுமையான சேவைகள் களப்பணியாளர்கள் மூலமாக இல்லந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் அத்தியாவசிய மற்றும் சிறப்பு மருந்துகளுக்கென ரூபாய் 25 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**11. அனைத்து அரசு மருத்துவ மையங்களில் ஆய்வக சேவைகள் ரூபாய் 185.24 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

"அனைவருக்கும் நலவாழ்வு" எனும் இலக்கை அடைவதற்கு ஏதுவாக, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக சேவைகளுக்கு வேதிப் பொருட்கள் மற்றும் ஆய்வக நுகர் பொருட்கள் (Laboratory reagent and consumables for Integrated Essential Laboratory Services) ரூபாய் 185.24 கோடி மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வுக் குழும நிதியில் வழங்கப்படும்.

**12. 50 வட்டாரங்களில் வட்டார பொது சுகாதார அலகுகளுக்கான புதிய கட்டடங்கள் ரூபாய் 40.44 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

"மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தில் அனைவருக்கும் நலவாழ்வு எனும் இலக்கை அடைவதற்காக, ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக சேவைகளை வலுப்படுத்தும் வகையில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 50 வட்டார பொது சுகாதார அலகுகள் (Block Level Public Health Units) அமைப்பதற்கான புதிய கட்டடங்கள் ரூபாய் 40.44 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**13. 8 மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

தமிழ்நாட்டில் ஆய்வக சேவைகளை வலுப்படுத்தும் விதமாக கோவில்பட்டி, காஞ்சிபுரம், பாலக்கோடு, கோபிசெட்டிபாளையம், சீர்காழி, மன்னார்குடி, வேதாரண்யம் மற்றும் குன்னூர் ஆகிய 8 அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

## 14. அனைத்து துணை சுகாதார நிலையங்களில் "மக்கள் நலவாழ்வு குழு" ஏற்படுத்தப்படும்.

அனைத்து துணை சுகாதார நிலையத்திற்குட்பட்ட பகுதிகளின் சுகாதார மேம்பாடு மற்றும் மேலாண்மை நடவடிக்கைக்காக அந்தந்த ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் கிராம சுகாதார செவிலியர் / இடைநிலை சுகாதார செவிலியர்கள் ஆகியோர் உள்ளடங்கிய "மக்கள் நலவாழ்வு குழு" ஏற்படுத்தப்படும்.

**15. மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு இருதய பாதுகாப்பு மருந்துகள் ரூபாய் 3.37 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

மாரடைப்பு ஏற்படுவதற்கான அதிக சாத்தியக்கூறு உள்ள நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயாளிகளுக்கு மாரடைப்பின் அறிகுறிகள் ஏற்படும் சூழ்நிலையில் உயிர்காக்கும் இருதய பாதுகாப்பு மருந்துகளை (Emergency Loading Dose) காலதாமதமின்றி சரியான நேரத்தில் உடனடியாக அளித்து உயிரிழப்பினை தடுத்திட ரூபாய் 3.37 கோடி மதிப்பிலான மருந்துகள் வழங்கப்படும்.

# III - மருத்துவக் கட்டமைப்புகள்

**16. 29 அரசு மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 161.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தமிழ்நாட்டில் 298 அரசு மருத்துவமனைகள் சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றன. கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் சுகாதார தேவைகளை மேம்படுத்தும் பொருட்டு அணைக்கட்டு, திருக்கழுக்குன்றம், திட்டக்குடி, விருத்தாசலம், புவனகிரி, சிதம்பரம், பாப்பிரெட்டிப்பட்டி, பண்ருட்டி, சங்கராபுரம், வேடசந்தூர், அந்தியூர், குலசேகரம், குத்தாலம், நாகூர், கீழக்கரை, சோளிங்கர், பேராவூரணி, பந்தலூர், தண்டராம்பட்டு, ஆரணி, செய்யாறு, வெம்பாக்கம், வந்தவாசி, விளாத்திகுளம், ஜல்லிப்பட்டி, கூத்தாநல்லூர், செஞ்சி, மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய 28 அரசு மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 161.20 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். மேலும், கோயம்புத்தூர் மாவட்டம் - வால்பாறை அரசு மருத்துவமனையில் அமைந்துள்ள மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கான குடியிருப்பு கட்டடங்கள் சீரமைக்கப்படும்.

## கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனைக்கு சீர்நோக்கு உபகரணங்கள்

**17. சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனைக்கு ரூபாய் 146.52 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.**

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 03.06.2021 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க ரூபாய் 230 கோடி மதிப்பீட்டில், சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், ஏழை எளிய மக்களின் நலன் கருதி 1000 படுக்கை வசதிகளுடன் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனைக்கு ரூபாய் 146.52 கோடி மதிப்பீட்டில் நவீன உயர் சிறப்பு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

## சென்னை அரசு பல் மருத்துவமனைக்கு சீர்மிகு விடுதி

**18. சென்னை – அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 64.90 கோடி மதிப்பீட்டில் புதிய மாணவியர் விடுதி கட்டப்படும்.**

சென்னை – அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ரூபாய் 64.90 கோடி மதிப்பீட்டில், 620 மாணவர்கள் தங்குவதற்கு ஏற்ப அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய மாணவியர் விடுதி கட்டப்படும்.

**19. 52 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 62.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தமிழ்நாட்டில் ஊரகப்பகுதிகளில் 1,808 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றன. கிராமப்புற சுகாதார மக்களின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு 52 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 62.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**20. சென்னை - எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் பன்னோக்கு உயர் சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டடம் ரூபாய் 53 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

சென்னை - எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் பன்னோக்கு உயர் சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டடம் ரூபாய் 53 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**21. 136 துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 49.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

கிராமப்புற மக்களின் சுகாதார தேவைகளை மேம்படுத்தும் வகையில் ஊரக பகுதிகளில் சிதலமடைந்த மற்றும் வாடகை கட்டடங்களில் செயல்பட்டு வரும் 136 துணை சுகாதார நிலையங்களுக்கு கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கான குடியிருப்புடன் கூடிய துணை சுகாதார நிலைய புதிய கட்டடங்கள் ரூபாய் 49.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## சேலம் அரசு மருத்துவமனையில் செவிலியர் பயிற்சி பள்ளி

**22. சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செவிலியர் பயிற்சிப் பள்ளி கட்டடம் ரூபாய் 35.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 300 மாணவிகளுக்கான விடுதியுடன் கூடிய செவிலியர் பயிற்சி பள்ளி கட்டடம் ரூபாய் 35.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**23. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 30.27 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

கிராமப்புற மக்களின் சுகாதார தேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 30.27 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## மூன்று மருத்துவமனைகளில் முன்னோடி மருத்துவக் கட்டடங்கள்

**24. மூன்று அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

மன்னார்குடி அரசுத் தலைமை மருத்துவமனை, தேன்கனிகோட்டை மற்றும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் தலா ரூபாய் 9 கோடி வீதம் ரூபாய் 27 கோடி செலவில் கட்டப்படும்.

## மதுரை, நெல்லை, தஞ்சை மாவட்டங்களும் மருத்துவ கிடங்குகளும்

**25. 3 மாவட்டங்களில் புதிய மருந்து கிடங்குகள் ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக நிறுவப்படும்.**

மதுரை, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் மருந்து கிடங்குகளுக்கு கூடுதலாக 3 புதிய கிடங்குகள் ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**26. இரண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிய ”எம். ஆர். ஐ. ஸ்கேன்” (MRI) ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிய "எம். ஆர். ஐ. ஸ்கேன்" (MRI) ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**27. சென்னை – அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 5.09 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

சென்னை – அரசு அறிஞர் அண்ணா சித்த மருத்துவமனையுடன் இணைந்த அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு பட்ட மேற்படிப்பு கட்டடத்தில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடுதலாக ஒரு தளமும் (PG Block), சித்த மருத்துவம் மற்றும் யுனானி மருத்துவ மாணவியருக்காக விடுதியில் கூடுதலாக ஒரு தளமும் ரூபாய் 5.09 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## கோவை மருத்துவமனைக்கு நீராவி சலவை வசதி

**28. கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை (Steam Laundry) வசதி ரூபாய் 2.45 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீனமயமாக்கப்பட்ட உபகரணங்களுடன் கூடிய நீராவி சலவை (Steam Laundry) வசதிகள் ரூபாய் 2.45 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

## கன்னியாகுமரி அரசு மருத்துவமனைக்கு நவீன உள்கட்டமைப்பு

**29. கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் உள்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 55 இலட்சம் மதிப்பிலான பொது அறுவை சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்களுடன் உள்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 1.45 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு மொத்தம் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**30. மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயற்கை எரிவாயு நிலையம் (Bio-Gas Plant) மற்றும் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP/ETP) ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம் மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயற்கை எரிவாயு நிலையம் (Bio-Gas Plant) ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP/ETP) ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் அமைக்கப்படும்.

# IV - புற்றுநோய் மருத்துவ சேவைகள்

## காஞ்சிபுரம்- அண்ணா மருத்துவமனைக்கு நவீன உபகரணங்கள்

**31. காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்கு அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

காஞ்சிபுரம் மாவட்டம், அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை ரூபாய் 218.46 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. மேலும், புற்றுநோய் சிகிச்சைக்கு தேவையான அதிநவீன மருத்துவ உபகரணங்கள் கூடுதலாக ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 32. புற்றுநோய் கீமோதெரபி மருந்துகளுக்கு கூடுதலாக ரூபாய் 10 கோடி வழங்கப்படும்.

புற்றுநோய்களால் ஏற்படும் இறப்பினைத் தவிர்க்கவும் அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கி வாழ்வை மேம்படுத்தவும், உயிர் காக்கும் உயர்ரக புற்றுநோய்க்கான கீமோதெரபி மருந்துகள் கொள்முதல் செய்ய தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திற்கு கூடுதலாக ரூபாய் 10 கோடி வழங்கப்படும்.

## 33. பாலரெங்காபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை ரூபாய் 4.61 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

மதுரை மாவட்டம் - பாலரெங்காபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை புதிய உட்கட்டமைப்பு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு வசதியுடன் ரூபாய் 4.61 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**34. ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 4 மாவட்டங்களில் சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் ரூபாய் 3.31 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.**

ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள துணை சுகாதார நலவாழ்வு மையங்களில் (HWC-HSCs), "சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள்" இடைநிலை சுகாதார பணியாளர்கள் (MLHP) மூலம் நடப்பாண்டில் ரூபாய் 3.31 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

# V - நகர்ப்புற நலவாழ்வு

**35. 200 புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குட்பட்ட நகர்ப்புற துணை சுகாதார பகுதியில் செவிலியர்கள் தடுப்பூசி உள்ளிட்ட மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத்திட்ட பணிகளை சிறப்பாக செயல்படுத்த ஒரு தனி கட்டமைப்பு அவசியப்படுகிறது. எனவே, 38 மாவட்டங்களில் 200 புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான கட்டடங்கள் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**36. 51 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 61.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ் உள்ள 12 ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளை திறம்பட வழங்க வலுவான கட்டமைப்பு அவசியம். எனவே, அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு 51 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 61.20 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**37. 40 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பல்வேறு சேவைகள் சிறப்பாக செயல்படுத்த கூடுதல் கட்டமைப்பு அவசியப்படுகிறது. ஆகவே, அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலச்சேவைகளுக்கான கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு 40 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## நகர்ப்புற மருத்துவ நிலையங்களுக்கு நவீன கருவிகள்

**38. நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு Ultrasound Scan, Semi Auto Analyzer, ECG மற்றும் Cell Counter கருவிகள் ரூபாய் 8.65 கோடி செலவில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களில் வாழும் பொதுமக்களுக்கான சிறப்பு மருத்துவ தேவையை கருத்தில் கொண்டு, அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 50 Ultrasound Scan கருவிகள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும், 100 Cell Counter கருவிகள் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டிலும், 80 Semi Auto Analyzer கருவிகள் ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 50 ECG கருவிகள் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டிலும் வழங்கப்படும்.

# VI - மகப்பேறு மருத்துவ சேவைகள்

## தாய்மார்கள் நலம் காக்கும் தரமான மகப்பேறு கட்டமைப்பு

**39. 13 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மகப்பேறு தீவிர சிகிச்சை பிரிவுகள் ரூபாய் 6.88 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.**

அரியலூர், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, திருவள்ளூர், விருதுநகர், இராமநாதபுரம், திருப்பூர், கடலூர் மற்றும் ஈரோடு ஆகிய 13 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 6 படுக்கைகள் கொண்ட பிரத்யேக மகப்பேறு தீவிர சிகிச்சை / உயர் சார்பு பிரிவுகள் ரூபாய் 6.88 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**40. லக்ஷயா திட்டத்தின் கீழ் 188 மகப்பேறு அறைகள் ரூபாய் 6.08 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.**

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மரியாதையுடன் கூடிய தரமான மகப்பேறு பராமரிப்பு சேவைகளை உறுதிசெய்யும் வகையில் லக்ஷயா திட்டத்தின் கீழ் 188 மகப்பேறு அறைகளின் தரம் ரூபாய் 6.08 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.

## விஜயபுரம் மகப்பேறு மருத்துவமனைக்கு புதிய கட்டடம்

**41. திருவாரூர் மாவட்டம் - விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு புதிய கட்டடம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

திருவாரூர் மாவட்டம் - விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு புதிய கட்டடம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**42. பேறுகாலத்திற்கு பின் ஏற்படும் இரத்தப்போக்கிற்கான சிகிச்சைக்கு ரூபாய் 2.98 கோடி செலவில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.**

பேறுகாலத்திற்கு பின் ஏற்படும் இரத்தப்போக்கு மகப்பேறு இறப்பிற்கு முக்கிய காரணமாக உள்ளது. இதை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்குவதற்கான உயிர்காக்கும் உபகரணங்கள் (Blood Collection Drape and Uterine Tamponade) 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 42 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 2.98 கோடி செலவில் வழங்கப்படும்.

**43. பாதுகாப்பான மகப்பேறு மற்றும் சுகப்பிரசவங்களை ஊக்குவிக்கும் வகையில் மகப்பேறு செவிலியர் வழிநடத்தும் பராமரிப்பு மற்றும் பயிற்சி பிரிவு உருவாக்கப்படும்.**

தற்போது தமிழ்நாட்டில் 40 சதவீதம் பிரசவங்கள் அறுவை சிகிச்சை மூலம் நடைபெறுகிறது. எனவே சுகப்பிரசவங்களை அதிகரிக்கும் வகையில் "மகப்பேறு செவிலியர் வழிநடத்தும் பராமரிப்பு மற்றும் பயிற்சி பிரிவு" (Midwifery Led Care and Training Unit - MLCU) அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையில் ரூபாய் 51.95 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**44. கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளை தொடர்ந்து கண்காணித்திடும் வகையில் தற்போது செயல்பட்டு வரும் மகப்பேறு மற்றும் சிசு கண்காணிப்பு மென்பொருள் (PICME) தரம் உயர்த்தி மறுசீரமைக்கப்படும்.**

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளை தொடர்ந்து கண்காணித்திடும் வகையில் தற்போது செயல்பட்டு வரும் மகப்பேறு மற்றும் சிசு கண்காணிப்பு மென்பொருள் (PICME) தரம் உயர்த்தி மறுசீரமைக்கப்படும்.

# VII - பச்சிளங்குழந்தை பராமரிப்பு சேவைகள்

**45. அனைத்து மாவட்டங்களிலும் ஆஷா மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் இணைந்து இரண்டு வயது வரை உள்ள குழந்தைகள் நலனை தொடர்ந்து கண்காணிக்கும் வகையில் ”இல்லங்களிலேயே இளம் குழந்தைகளுக்கான பராமரிப்பு சேவைகள்” (Home Based Young Child Care – HBYC) செயல்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ஆஷா மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் இணைந்து இரண்டு வயது வரை உள்ள குழந்தைகளை தொடர்ந்து கண்காணிக்கும் வகையில் இல்லங்களிலேயே இளம் குழந்தை பராமரிப்பு சேவைகள் (Home Based Young Child Care – HBYC) செயல்படுத்தப்படும். இரண்டு வயது வரையுள்ள இளம் குழந்தைகளின் முழுமையான மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் குறைந்தது ஐந்து முறை இல்லங்களில் சந்தித்து பராமரிப்பு சேவைகள் வழங்கப்படும்.

46. பாதுகாப்பான தாய் சேய் நல சேவைகளை மேம்படுத்திட மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் உள்ளடங்கிய 553 கிராஷ் கார்ட் (Crash Cart), பச்சிளங் குழந்தைகள் சிகிச்சைக்கான 16 வென்டிலேட்டர் கருவிகள் (Neonatal Ventilator), 6 உயர்ரக அதிநவீன வென்டிலேட்டர் (High Frequency Oscillatory Neonatal Ventilator) கருவிகள் மற்றும் 150 ஆக்ஸிஜன் பிளெண்டர் (Oxygen Blender) கருவிகள் ரூபாய் 6.56 கோடி செலவில் வழங்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள 553 முதல் நிலை பரிந்துரை மையங்களுக்கு (First Referral Unit) மகப்பேறு சார்ந்த அவசர சிகிச்சைக்காக ரூபாய் 1.10 கோடி மதிப்பீட்டிலான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் உள்ளடங்கிய 553 கிராஷ் கார்ட் (Crash Cart),

சுவாச பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ள பச்சிளங்குழந்தைகளின் இறப்பினைக் குறைப்பதற்கு எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, சென்னை அரசு தாய்சேய் நல

மருத்துவமனை மற்றும் கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள சிறப்பு பச்சிளங் குழந்தை பராமரிப்பு பிரிவுகளுக்கு ரூபாய் 2.4 கோடி மதிப்பீட்டில் 16 வென்டிலேட்டர் (Neonatal Ventilator) கருவிகள்,

சென்னையிலுள்ள அரசு குழந்தை நல மருத்துவமனை மற்றும் அரசு தாய்சேய் நல மருத்துவமனை, திருச்சி, கோயம்புத்தூர், தருமபுரி மற்றும் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 1.56 கோடி மதிப்பீட்டில் 6 உயர்ரக அதிநவீன பச்சிளங் குழந்தை வென்டிலேட்டர் (High Frequency Oscillatory Neonatal Ventilator) கருவிகள்

மற்றும் 75 சிறப்பு பச்சிளங் குழந்தை பராமரிப்பு பிரிவுகளுக்கு ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் 150 ஆக்ஸிஜன் பிளெண்டர் (Oxygen Blender) கருவிகள் வழங்கப்படும்.

## பச்சிளங்குழந்தைகளை பராமரிக்கும் உபகரணங்கள்

**47. 75 சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகளுக்கு உயிர்காக்கும் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 4.76 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் சிசு மரண விகிதத்தை மேலும் குறைப்பதற்கு 75 சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்பு பிரிவுகளுக்கு (SNCU) உயிர்காக்கும் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 4.76 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**48. குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கு இரத்தசோகை கண்டறியும் வகையில் 8 2 0 ஹீமோகுளோபினோமீட்டர் கருவிகள் ரூபாய் 3.94 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

" இரத்தசோகை இல்லா தமிழ்நாடு" எனும் இலக்கை எய்திடும் வகையில் தேசிய சிறார் நலத் திட்டத்தின் (RBSK) கீழ் இயங்கும் 820 மருத்துவக்குழுவினரின் மூலம் 6 மாதம் முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும், 6 வயது முதல் 1 8 வயது உள்ளடக்கிய குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கு பள்ளிகளிலும் இரத்தசோகையை கண்டறிய ஹீமோகுளோபினோமீட்டர் (Hemoglobinometer) கருவிகள் ரூபாய் 3.94 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**49. நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் "தாய் மற்றும் பச்சிளங் குழந்தை சிறப்பு கவனிப்பு பிரிவு" (MNCU) ரூபாய் 3.44 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.**

திருச்சி, திருவண்ணாமலை, கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள பச்சிளங் குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை மையங்களில் குழந்தையுடன் தாயையும் உடன் அனுமதித்து கவனிக்கும் வகையில் 20 படுக்கைகள் கொண்ட தாய் மற்றும் பச்சிளங் குழந்தை சிறப்பு கவனிப்பு பிரிவு (MNCU) ரூபாய் 3.44 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**50. இரண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கூடுதல் சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகள் அமைத்திடவும் மற்றும் மூன்று அரசு மருத்துவமனைகளிலுள்ள சிறப்பு பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையங்களுக்கு அதிநவீன உயிர்காக்கும் உபகரணங்கள் வழங்கிடவும் ரூபாய் 2.91 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

வேலூர் மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வெவ்வேறு மருத்துவ நிலையங்களிலிருந்து உயர் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்படும் பச்சிளங்குழந்தைகளின் தேவையை கருதி ரூபாய் 1.34 கோடி மதிப்பீட்டில் கூடுதல் சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகள் அமைக்கப்படும். மேலும் கோயம்புத்தூர் மாவட்டம்-மேட்டுப்பாளையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்-திருவரங்கம் அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் புதியதாக நிறுவப்பட்டு உள்ள 3 சிறப்பு பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையங்களுக்கு அதிநவீன உயிர்காக்கும் உபகரணங்கள் ரூபாய் 1.57 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

51. 5 மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையத்திற்கு ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டிலான உபகரணங்களும் மற்றும் அனைத்து மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்களுக்கு ரூபாய் 11.75 இலட்சம் செலவில் இளம் சிசு வளர்ச்சி கண்காணிப்பு உபகரணங்களும் வழங்கப்படும்.

தேசிய சிறார் நலத்திட்டத்தின் கீழ், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருப்பத்தூர், காஞ்சிபுரம், தென்காசி மற்றும் வாலாஜா ஆகிய 4 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் செயல்படும் மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையத்திற்கு ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டிலான உபகரணங்களும், 39 மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்கள் மற்றும் 8 மண்டல பயிற்சி மையங்களுக்கு ரூபாய் 11.75 இலட்சம் செலவில் இளம் சிசு வளர்ச்சி கண்காணிப்பு உபகரணங்களும் வழங்கப்படும்.

**52. அரசு மருத்துவமனைகளில் செயல்படும் 27 தாய்ப்பால் வங்கிகளுக்கு நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு வலுப்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் 27 தாய்ப்பால் மேலாண்மை மையங்களும், 20 தாய்ப்பால் அலகுகளும் நிறுவப்பட்டு ஆண்டுதோறும் சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட எடை குறைந்த குறைமாத குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இந்த தாய்ப்பால் வங்கிகளை மேம்படுத்தும் வகையில் ரூபாய் 81 இலட்சம் மதிப்பீட்டிலான உபகரணங்கள் வழங்கப்படும்.

## 53. ஐந்து மாவட்டங்களில் "ஒருங்கிணைந்த உணர்வுத் திறன் பூங்கா" அமைக்கப்படும்.

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் காஞ்சிபுரம், திருப்பத்தூர், தென்காசி, வாலாஜாபேட்டை ஆகிய 4 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள மாவட்ட தொடக்க நிலை இடையீட்டு மையங்களில் "ஒருங்கிணைந்த உணர்வுத் திறன் பூங்கா" (Sensory Integration Park) அமைக்கப்படும்.

**54. சென்னை மாநகராட்சியில் 4 புதிய பச்சிளம் குழந்தை நிலைப்படுத்துதல் பிரிவு ஏற்படுத்தப்படும்.**

பச்சிளம் குழந்தை பராமரிப்புக்காக சென்னை மாநகராட்சியில் சைதாப்பேட்டை, செனாய் நகர், பெருமாள்பேட்டை மற்றும் அடையாறு ஆகிய 4 மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையத்தில் புதிய பச்சிளம் குழந்தை நிலைப்படுத்துதல் பிரிவு (New Born Stabilization Unit - NBSU) ஏற்படுத்தப்படும்.

# VIII - வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள்

## 55. வளரிளம் பருவத்தினருக்காக 25,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

வளரிளம் பருவத்தினர் நல்வாழ்வை மேம்படுத்திடும் வகையில் 25,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் அனைத்து மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாதத்திற்கு ஒரு முகாம் என்ற அளவில் நடத்தப்படும். இந்த முகாம்களில் 10 முதல் 19 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினருக்கு சுகாதார ஆலோசனைகள், விழிப்புணர்வு மற்றும் இரத்தசோகைக்கான பரிசோதனைகள் உள்ளிட்ட அனைத்து சிறப்புப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

**56. வளரிளம் பருவத்தினருக்கான நலவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு பள்ளி சுகாதார தூதுவர்களுக்கான பயிற்சியும், வளரிளம் பள்ளி மாணவர்களுக்கு சுகாதார பயிற்சி கையேடு மற்றும் இதர பொருட்களும் வழங்கப்படும்.**

அனைவருக்கும் நலவாழ்வு எனும் நோக்கில் வளரிளம் பருவத்தினருக்கான நலவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் 8 மாவட்டங்களிலும் பள்ளி சுகாதார தூதுவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு (School Health Ambassadors) " வளரிளம் பருவத்தினரின் சுகாதார மற்றும் நலவாழ்வு குறித்த பயிற்சி" வழங்கப்படும். மேலும் வளரிளம் பருவ சக வயது பயிற்றுநர்களுக்கு (Peer Educator) "பயிற்சி கையேடு மற்றும் இதர பொருட்கள்" சுமார் ரூபாய் 2.37 கோடி செலவில் வழங்கப்படும்.

# IX - சிறுநீரக பராமரிப்பு சேவைகள்

**57. மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன சிறுநீரக கல் அகற்றும் மருத்துவ உபகரணம் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன முறையில் சிறுநீரக கல் அகற்றும் மருத்துவ உபகரணம் (ExtraCorporeal Shock Wave Lithotripsy) ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**58. அரசு மருத்துவமனைகளில் 50 இரத்த சுத்திகரிப்பு (Dialysis) உபகரணங்கள் ரூபாய் 3.25 கோடி செலவில் நிறுவப்படும்.**

வந்தவாசி, திட்டக்குடி, குளித்துறை, சாத்தூர் அரசு மருத்துவமனைகள் உள்ளிட்ட அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 50 இரத்த சுத்திகரிப்பு (Dialysis) உபகரணங்கள் ரூபாய் 3.25 கோடி செலவில் நிறுவப்படும்.

**59. "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின் கீழ் சுய இரத்த சுத்திகரிப்புக்கான CAPD Bags ரூபாய் 3.01 கோடி செலவில் கூடுதலாக வழங்கப்படும்.**

நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோயாளிகளின் நலனுக்காக "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின் கீழ் தொடர் சுய இரத்த சுத்திகரிப்புக்கான CAPD Bags ரூபாய் 3.01 கோடி செலவில் கூடுதலாக வழங்கப்படும்.

**60. சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பரிசோதனை ரூபாய் 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.**

சிறுநீரில் வெளியேறும் புரதத்தின் அடிப்படையில் ஆரம்ப நிலையிலேயே சிறுநீரக செயலிழப்பை கண்டறியும் பரிசோதனை அனைத்து துணை சுகாதார நிலையங்களிலும் ரூபாய் 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

# X - மனநல மருத்துவ சேவைகள்

**61. போதை மீட்பு சேவைகள் அதிகமாக தேவைப்படும் பகுதிகளை கண்டறிந்து உரிய மனநல ஆலோசனை, மருத்துவ சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகள் அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் கிடைத்திடும் வகையில் கட்டமைப்புகள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.**

போதை மீட்பு சேவைகள் அதிகமாக தேவைப்படும் பகுதிகளை கண்டறிந்து துரிதமான உரிய சிகிச்சைகள் அளிக்கும் வகையில் அனைத்து நிலை மருத்துவமனைகளில் போதை மீட்பு மற்றும் புனர்வாழ்வு சேவைகள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும். மேலும், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு போதை மீட்பு சேவை குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். போதை மீட்பிற்கான தொடர் சிகிச்சைகள் ஆரம்ப சுகாதார நிலைய அளவில் தொடங்கி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வரை ஒருங்கிணைந்த முறையில் வழங்கப்படும்.

**62. பின்பேறு கால தாய்மார்களுக்கான தாய்-சேய் மனநல சேவைகள் அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் ஒருங்கிணைந்து வழங்கப்படும்.**

குழந்தை பிறந்ததிலிருந்து ஒரு வருடத்திற்குள், பிரசவித்த தாய்மார்களில் சிலர், மனநல பிரச்சினைகளுக்கு உள்ளாக வாய்ப்புள்ளது. இவ்வகை பாதிப்பு, தாய்மார்களை மட்டுமல்லாமல் குழந்தைகளின் உடல் மற்றும் மனநல வளர்ச்சியையும் பாதிக்கக்கூடும். எனவே, இத்தகைய மனநல பிரச்சனைகளிலிருந்து பின்பேறு கால தாய்மார்களை மீட்டெடுப்பதற்காக "தாய்-சேய் மனநல சேவைகள்" அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் ஒருங்கிணைந்து வழங்கப்படும்

## 63. மாநில அளவிலான "தமிழ்நாடு மனநல மருத்துவ கருத்தரங்கு" நடத்தப்படும்.

மனநல மருத்துவர்களின் திறன் மேம்பாடு மற்றும் மனநல சேவைகள் பற்றிய ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு மாநில அளவிலான கருத்தரங்கு நடத்தப்படும்.

# XI -பார்வையிழப்பு தடுப்பு சேவைகள்

**64. சென்னை "எழும்பூர் - மண்டல கண் மருத்துவவியல் நிலையத்திற்கு" ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.**

சென்னை எழும்பூர் - மண்டல கண் மருத்துவவியல் நிலையத்திற்கு கருவிழி மாற்று அறுவை சிகிச்சை, கண் விழித்திரை சிகிச்சை மற்றும் கண் நீரழுத்த நோய் போன்ற சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளுக்கான அதிநவீன கண் மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**65. திருநெல்வேலி, காரைக்குடி மற்றும் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 3.25 கோடி மதிப்பீட்டில் கண் சிகிச்சைக்கான தனிப்பிரிவு சீரமைக்கப்பட்டு, நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.**

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் 2.75 கோடி மதிப்பீட்டில் கண் சிகிச்சைக்கான தனிப்பிரிவு சீரமைக்கப்படும். மேலும், காரைக்குடி மற்றும் உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் கண் மருத்துவ சிகிச்சைக்கான நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

**66. தாம்பரம் மற்றும் திருபெரும்புதூர் அரசு மருத்துவமனைகளில் புதியதாக கண் வங்கி நிறுவப்படும் மற்றும் மாநில அளவில் கண் மருத்துவ சேவைகளை கண்காணிக்க புதிதாக "கண் மருத்துவ மேலாண்மை செயலி" உருவாக்கப்படும்.**

தாம்பரம் மற்றும் திருபெரும்புதூர் அரசு மருத்துவமனைகளில் கண் தானத்தை ஊக்குவிக்கும் விதமாக புதியதாக கண் வங்கி நிறுவப்படும். மேலும் தமிழ்நாட்டிலுள்ள அரசு, தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களில் நடைபெறும் கண் மருத்துவ சேவைகளை கண்காணிக்க புதிதாக "கண் மருத்துவ மேலாண்மை செயலி" உருவாக்கப்படும்.

# XII - பல் மருத்துவ சேவைகள்

**67. பள்ளி மாணவர்களின் வாய் மற்றும் பல் சுகாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் புன்னகை திட்டத்தின் கீழ் "Pit and Fissure Sealant" சிறப்பு சேவைகள் வழங்கப்படும்.**

சென்னை மாநகராட்சியில் உள்ள 10 முதல் 12 வயதுக்குட்பட்ட அரசு பள்ளி மாணவர்களுக்கு வாய் மற்றும் பல் சுகாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் புன்னகை திட்டத்தின் கீழ் பற்சிதைவை தடுப்பதற்கான "Pit and Fissure Sealant" சிறப்பு சிகிச்சை முறை செயல்படுத்தப்படும்.

## மதுரை, நெல்லை, கோவை, சேலத்தில் புதிய மருத்துவ கட்டடங்கள்

**68. நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டடம் மற்றும் உபகரணங்களுடன் கூடிய பன்னோக்கு பல் மருத்துவ நிலையம் அமைக்கப்படும்.**

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி ஆகிய 4 மருத்துவமனைகளில் கட்டடம் மற்றும் உபகரணங்களுடன் கூடிய பன்னோக்கு பல் மருத்துவ நிலையம் அமைக்கப்படும்.

# XIII - சிறப்பு மருத்துவ சேவைகள்

69. மலைவாழ் பகுதிகளில் வசிக்கும் அனைவருக்கும் ஹீமோகுளோபினோபதி நோய் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் மேலும், ஹீமோகுளோபினோபதி நோய்க்கான உயிர் காக்கும் உயர்ரக மருந்துகள் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மலைவாழ் மக்களிடையே பரவலாக காணப்படும் சிக்கில் செல் அனீமியா, தலசீமியா போன்ற இரத்தம் சம்பந்தப்பட்ட நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளித்திடும் வகையில் அனைத்து மலைவாழ் பகுதிகளில் வசிக்கும் அனைவருக்கும் "சமூக அளவிலான ஹீமோகுளோபினோபதி நோய் கண்டறியும் பரிசோதனைத் திட்டம்" நடப்பாண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். மேலும், ஹீமோபிலியா, தலசீமியா மற்றும் இதர ஹீமோகுளோபினோபதி நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் உரிய சிகிச்சைகள் வழங்கிட ஏதுவாக, உயிர் காக்கும் உயர்ரக மருந்துகள் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**70. காசநோய் பரிசோதனைக்கான நுகர்பொருட்கள் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் வழங்கி, அனைத்து வட்டார அளவிலும் ஒருங்கிணைந்த காசநோய் சேவைகள் வழங்கப்படும்.**

" காசநோய் இல்லா தமிழ்நாடு" எனும் இலக்கினை அடையும் வகையில் காசநோய்க்கான மூலக்கூறு அடிப்படையிலான பரிசோதனை விகிதத்தை அதிகரிக்கும் வண்ணம் பரிசோதனைக்கான வினைப்பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள் அனைத்து மருத்துவ நிலையங்களுக்கு ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். மேலும், முதன்முறையாக வட்டார ஆரம்ப சுகாதார நிலைய அளவில் காசநோயைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள், சிகிச்சைக்கான மருந்துகள், முதலுதவிகள் உள்ளடங்கிய அனைத்து மருத்துவ சேவைகளும் ஓரிடத்தில் ஒருங்கிணைந்து கிடைத்திடும் வகையில் "Walk in Centre for TB" உருவாக்கப்படும்.

## அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நவீன கட்டணப் படுக்கைகள்

**71. ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் எட்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய "கட்டணப் படுக்கைகள்" (Pay Wards) அமைக்கப்படும்.**

திருநெல்வேலி, தஞ்சாவூர், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பொள்ளாச்சி, கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், பெரம்பலூர், கும்பகோணம், தென்காசி மற்றும் கோவில்பட்டி ஆகிய 8 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் சிகிச்சைப்பெற கட்டணப்படுக்கைகள் (Pay Ward) அமைக்கப்படும்.

**72. கொடைக்கானல், கந்தர்வக்கோட்டை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளிலுள்ள உடற்கூறாய்வு மையங்கள் ரூபாய் 10.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

கொடைக்கானல், கந்தர்வக்கோட்டை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளிலுள்ள உடற்கூறாய்வு மையங்களின் தரத்தை சிறந்த தடயவியல் சுற்றுச்சூழல் அமைப்பின் அடிப்படையில் மேம்படுத்திட ரூபாய் 10.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**73. குழந்தைப் பருவ நீரிழிவு நோய் (Type I Diabetes) சிகிச்சை மற்றும் மேலாண்மைக்காக மாநில அளவிலான பதிவேடு உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் முதன்முறையாக குழந்தைப் பருவ நீரிழிவு நோய்க்கான (Type I Diabetes) மாநில அளவிலான பதிவேடு உருவாக்கப்படும்.

## சென்னை மருத்துவக் கல்லூரியில், செவித்திறன் ஆய்வகம்

**74. சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் செவியெலும்பு அறுவை திறன் ஆய்வகம் (Temporal Bone Skill Lab) ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

செவி அறுவை சிகிச்சைக்கு செவி எலும்பின் அமைப்பு, அதன் நுணுக்கமான உட்கூறியியல் மற்றும் கட்டமைப்புகள் பற்றிய முழுமையான அறிவு அவசியமாகும். ஆகவே, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் காது மூக்கு தொண்டை மருத்துவரின் அறுவை சிகிச்சைத் திறனை மேம்படுத்தும் வகையில் மாநில தலைமை நிலையமான ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் செவியெலும்பு அறுவை திறன் ஆய்வகம் (Temporal Bone Skill Lab) ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**75. எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் "குழந்தைகள் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை பிரிவிற்கு தேவையான அதிநவீன உபகரணங்கள்" ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

குழந்தைகளை பாதிக்கும் இரத்தப்புற்று நோய் மற்றும் பிற அரியவகை நோய்களுக்கான தகுந்த சிகிச்சைகள் வழங்கிடும் வகையில் எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் "குழந்தைகள் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை பிரிவிற்கு தேவையான அதிநவீன உபகரணங்கள்" ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**76. சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) தரச்சான்றிதழ் பெறுவதற்காக நவீன ஆய்வக உபகரணங்கள் மற்றும் ஆய்வக கட்டமைப்பு ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (National Accredition Board for Laboratories - NABL) தரச்சான்றிதழ் பெறுவதற்காக நவீன ஆய்வக உபகரணங்கள் மற்றும் ஆய்வக கட்டமைப்பு ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**77. சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிறார்களுக்கான காக்லியர் உள்வைப்பு (Cochlear Implant) எனும் சிறப்பு அறுவை சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.**

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் 94 இலட்சம் மதிப்பீட்டில் சிறார்களுக்கான காக்லியர் உள்வைப்பு (Cochlear Implant) எனும் சிறப்பு அறுவை சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

**78. மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு லேப்ரோஸ்கோபி, ப்ரோன்கோஸ்கோபி, எலும்பு மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் மற்றும் இரத்த சேமிப்பு அலகிற்கான உபகரணங்கள் ரூபாய் 1.58 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில், அதிநவீன லேப்ரோஸ்கோபி (Laparoscopy) மற்றும் ப்ரோன்கோஸ்கோபி (Bronchoscopy) மருத்துவக் கருவிகளும், இன்னுயிர் காப்போம் - நம்மை காக்கும் 48 திட்டத்தின் கீழ் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் நுண்துளை எலும்பு அறுவை சிகிச்சை மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்களும், திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமையப் பெற்ற புதிய 500 படுக்கை வசதிகள் கொண்ட பிரிவிற்கு ரூபாய் 23 இலட்சம் மதிப்பீட்டில் இரத்த சேமிப்பு அலகிற்கான (Blood Storage Unit) நவீன உபகரணங்களும் வழங்கப்படும்.

**79. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள புறநோயாளிகள் பிரிவுகளின் நுழைவு வாயிலில் "வைட்டல்ஸ்- பே" (Vitals-Bay) என்ற தனிப்பிரிவு உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள புறநோயாளிகள் பிரிவுகளின் நுழைவுவாயிலில் "வைட்டல்ஸ்- பே" (Vitals-Bay) என்ற தனிப்பிரிவு உருவாக்கப்படும். இப்பிரிவானது மருத்துவமனை பணியாளர்கள் கொண்டு முக்கிய அடிப்படை மதிப்பீட்டு மருத்துவ பரிசோதனைகளான உயரம், எடை, நடுக்கை சுற்றளவு, நாடித்துடிப்பு, சுவாசவீதம், இரத்த அழுத்தம், இரத்தசோகை, இரத்த சர்க்கரை மற்றும் இரத்த உயிர்வாயு (SPO2) போன்றவை அளவிடப்பட்டு, மருத்துவரை பார்ப்பதற்கு முன், நோயாளிகளுக்கு அறிக்கையாக வழங்கப்படும். இந்த தொடக்க மதிப்பீட்டின் படி, மருத்துவர்கள் நோயாளிகளுக்கு விரைவாக சிகிச்சையை வழங்க ஏதுவாக இருக்கும்.

**80. அரசு துணை சுகாதார அளவிலான நலவாழ்வு மையங்கள் "தேசிய தரச் சான்றிதழ்" பெற நடவடிக்கை எடுக்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அரசு துணை சுகாதார நிலையம் – நலவாழ்வு மையங்கள் படிப்படியாக தேசிய தர உத்தரவாத நிர்ணய அடிப்படையில் "தேசிய தரச் சான்றிதழ்" பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

**81. தமிழ்நாட்டில் ரூபெல்லா தட்டம்மை நீக்குதல் (MR Elimination) என்ற இலக்கை 50 விழுக்காடு மாவட்டங்களில் நிறைவேற்றப்படும்.**

தமிழ்நாட்டில் 2023-ஆம் ஆண்டிற்குள் ரூபெல்லா தட்டம்மை நீக்குதல் (MR Elimination) என்ற இலக்கை குறைந்தபட்சம் 50 விழுக்காடு மாவட்டங்களில் நிறைவேற்றப்படும்.

## தூய்மை பணியாளர்களுக்கு
## தனி பயன்பாட்டு அறைகள்

**82. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டிற்கென "தனி அறை" அமைத்துத் தரப்படும்.**

தூய்மை பணியாளர்கள் 24 மணி நேரமும் மருத்துவமனை வளாகத்தை தூய்மையாக பராமரிப்பதன் மூலம் நோய்த் தொற்றை பெருமளவில் குறைப்பதற்கு உதவுகின்றனர். அவர்களின் பணியிட நலன் கருதி அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் "தனி அறை" அமைத்துத் தரப்படும்.

# XIV - இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

**83. 100 இந்திய மருத்துவமுறை மருந்தகங்கள் ரூபாய் 12.98 கோடி செலவில் ஆயுஷ் நல மையங்களாக தரம் உயர்த்தப்படும்.**

தேசிய ஆயுஷ் திட்டத்தின் கீழ் 100 இந்திய மருத்துவமுறை பிரிவுகளின் உட்கட்டமைப்புகளை புனரமைப்பதற்கும் புதிய உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் வழங்குவதற்கும் அவற்றின் தரத்தினை உயர்த்தி இப்பிரிவுகளில் கூடுதலாக உடல் நலம் பேணும் யோகா முறைகளை பயிற்றுவிக்கும் வசதியை ஏற்படுத்திடவும் அவை அனைத்தும் ஆயுஷ் நல மையங்களாக ரூபாய் 12.98 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

**84. 30 இந்திய மருத்துவமுறை புறநோயாளி பிரிவுகள் ரூபாய் 6 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.**

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை கட்டுப்பாட்டில் அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய அளவில் செயல்பட்டு வரும் 25 சித்த மருத்துவப் பிரிவுகள், 2 யோகா - இயற்கை மருத்துவப் பிரிவுகள், 1 யுனானி, 1 ஓமியோபதி மற்றும் 1 ஆயுர்வேத பிரிவுகளுக்கு தலா ரூபாய் 15 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும். மேலும், இப்பிரிவுகளுக்கு தலா ரூபாய் 5 இலட்சம் செலவில் புதிய உபகரணங்கள் மற்றும் தளவாட பொருட்கள் வழங்கி தரம் உயர்த்தப்படும்.

**85. தேசிய எலும்பு- தசை சிதைவு நோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு திட்டம், 50 சித்த மருத்துவப் பிரிவுகளில் ரூபாய் 4.50 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.**

எலும்பு- தசை சிதைவு நோய் வராமல் தடுக்கவும் மற்றும் இந்நோய்க்கான சிகிச்சை கிடைக்கச் செய்யும் வகையிலும் தேசிய எலும்பு- தசை சிதைவு நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் அரசு ஆரம்ப சுகாதார நிலைய அளவில் செயல்பட்டு வரும் 49 சித்த மருத்துவப் பிரிவுகள் மற்றும் ஒரு ஊரக சித்த மருந்தகத்திலும் இந்நோய்க்கான சிசிச்சை பெறுவதற்கு தேவையான வசதிகள் ரூபாய் 4.50 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**86. ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, பெரம்பலூர், திருப்பூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள "மாவட்ட சித்த மருத்துவமனைகள்" ரூபாய் 1.75 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.**

ஈரோடு, காஞ்சிபுரம், திருப்பூர், வேலூர், மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்நோயாளிகள் படுக்கை வசதியுடன் கூடிய சித்த மருத்துவமனைகள் தனி கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இக்கட்டடங்கள் கட்டப்பட்டு 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்டுள்ளதால் இக்கட்டடங்கள் தலா ரூபாய் 25 இலட்சம் செலவில் புனரமைத்து வழங்குவதற்கும், மதுரை (உசிலம்பட்டி) மற்றும் பெரம்பலூர் மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள சித்த மருத்துவமனைகளுக்கு தலா ரூபாய் 25 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டுவதற்குமாக மொத்தம் ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**87. மலைவாழ் பழங்குடியின மக்கள் பெரும்பான்மையாக வாழும் 10 பகுதிகளில் "நடமாடும் சித்த மருந்தகங்கள்" ரூபாய் 94.25 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.**

மலைவாழ் பழங்குடியின மக்கள் பெரும்பான்மையாக வாழும் காரமடை, எரிசனம்பட்டி, சித்தேரி, வடகௌஞ்சி, நாகலூர், அகமலை, மாஞ்சோலை, டாப் செங்காட்டுப்பட்டி, ஏலகிரி மற்றும் கரியலூர் ஆகிய 10 இடங்களில் பழங்குடியின மக்களின் உடல் நலத்தை மேம்படுத்தும் பொருட்டு அவர்கள் வாழும் இடத்திற்கே சென்று சிகிச்சை வழங்க வழிவகை செய்ய நடமாடும் சித்த மருந்தகங்கள் ரூபாய் 94.25 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

## மூன்று மருத்துவக் கல்லூரிகளும் நவீனமய முன்னெடுப்பும்

**88. சென்னையில் உள்ள அரசினர் சித்த, யோகா - இயற்கை மருத்துவம் மற்றும் யுனானி ஆகிய மூன்று மருத்துவக் கல்லூரிகளில் நவீன வகுப்பறைகள் வசதி ஏற்படுத்தப்படும்.**

சென்னையில் செயல்பட்டு வரும் அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அரசு யுனானி மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு யோகா - இயற்கை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் 900 மாணவ, மாணவியர்க்கு சிறப்பாக கல்வி கற்பதை மேலும் ஊக்குவிக்கும் வகையில் நவீன வகுப்பறைகள் (Smart Classrooms) ரூபாய் 50 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**89. கடலூர் மாவட்டம் – நடுவீரப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்படும் சித்த மருத்துவப் பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டப்படும்.**

கடலூர் மாவட்டம் - நடுவீரப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்பட்டுவரும் சித்த மருத்துவப் பிரிவு தற்போது பொதுப் பிரிவு கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த சித்த மருத்துவப் பிரிவிற்கென்று தனியாக புதிய கட்டடம் கட்டப்படும்.

## 90. ஆயுஷ் மருத்துவ அலுவலர் மற்றும் மருத்துவ ஆலோசகர்களின் " திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிப் பட்டறை" நடத்தப்படும்.

அரசு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் பணிபுரியும் இந்திய மருத்துவமுறைகளான சித்தா, ஆயுர்வேதா, ஓமியோபதி, யுனானி, மற்றும் யோகா - இயற்கை மருத்துவ அலுவலர்கள் / உதவி மருத்துவ அலுவலர்கள் / மருத்துவ ஆலோசகர்கள் என 1,500-க்கும் மேற்பட்ட அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டினை அதிகரிக்க செய்யும் வகையில் தேவையான பயிற்சியினை வழங்க பயிற்சிப் பட்டறை நடத்தப்படும்.

# XV - உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து மேலாண்மை

**91. சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மூன்று மாவட்ட உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்களில் நுண்ணுயிரியல் பிரிவு ரூபாய் 18 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.**

உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாடு துறையின் கீழ் இயங்கும் உணவு ஆய்வகங்களில் உணவு பகுப்பாய்வு மற்றும் தர நிர்ணயங்கள் ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. உணவுப் பகுப்பாய்வகத்தில் நுண்ணுயிரியல் பிரிவை நிறுவுவதன் மூலம் குடிநீர், பால் மற்றும் பால் பொருட்கள், பழங்கள், காய்கறிகள், இறைச்சி வகைகள், கடல் உணவுகள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் ஆகியவற்றிலுள்ள நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடவும், மனிதர்களுக்கு வயிற்றுப்போக்கு, காலரா போன்ற நோய்களை ஏற்படுத்தும் நுண்ணுயிரிகளைக் கண்டறியவும் உதவும். இதனை மேலும் வலுப்படுத்தும் விதமாக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மூன்று மாவட்ட உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்களில் நுண்ணுயிரியல் பிரிவு தொடங்க ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**92. கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் ரூபாய் 8.85 கோடி செலவில் ஐந்து உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்களின் இரசாயனப் பிரிவு மேம்படுத்தப்படும்.**

உணவு பகுப்பாய்வுக் கூடத்தில் இரசாயன பிரிவை ஏற்படுத்துவதன் மூலம் புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், நார்ச்சத்து போன்ற அடிப்படை ஊட்டச்சத்துக்கள் குறித்து ஆய்வு செய்யவும், செயற்கை நிறங்கள், உணவை பாதுகாக்க உதவும் வேதி பொருட்கள் குறித்தும் ஆய்வு செய்யவும் பயன்படும். இதனை மேலும் வலுப்படுத்தும் விதமாக கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்களின் இரசாயனப் பிரிவு ரூபாய் 8.85 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

## உணவைப் பரிசோதிக்கும் அதிநவீன உபகரணங்கள்

**93. உணவு மாதிரிகளில் பூச்சிக்கொல்லிகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை பரிசோதிப்பதற்காக கோயம்புத்தூரில் உள்ள உணவுப் பகுப்பாய்வு ஆய்வகத்தில் ரூபாய் 4.50 கோடி செலவில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.**

உணவுப்பொருட்களில் பூச்சிக் கொல்லிகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை ஆய்வு செய்வதற்காக, தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம்-2006-ன் படி பழங்கள், காய்கறிகள், மசாலாப் பொருட்கள், தானியங்கள் மற்றும் இயற்கை உணவு வகைகளில் உள்ள பூச்சிக் கொல்லிகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை பரிசோதிக்க ரூபாய் 4.50 கோடி மதிப்பீட்டில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

**94. தினசரி நாளிதழ்களில் உணவை பொட்டலம் செய்வதினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அன்றாட உணவு முறைகளில் சிறுதானிய உணவு வகைகள் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.**

உணவை சுகாதாரமாக சமைத்திருந்தாலும், அதனை பொட்டலமிடுவதற்கும், பரிமாறுவதற்கும் அச்சிடப்பட்ட தாள்களை பயன்படுத்தும்பொழுது அத்தகைய உணவை உட்கொள்வது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். தினசரி நாளிதழ்களில் உணவை பொட்டலம் செய்வதினால் அதில் அச்சிடப்பட்டுள்ள கருப்பு மையிலுள்ள பல நச்சு வேதிப்பொருட்கள் உணவில் கலந்து பல்வேறு உடல்நலக் குறைபாடுகளை ஏற்படுத்துவதால் தினசரி நாளிதழ்களில் உணவை பொட்டலம் செய்து விநியோகிப்பதை தடுக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொதுமக்களின் ஆரோக்கியமான வாழ்விற்காக அவர்களின் அன்றாட உணவு முறைகளில் சிறுதானிய உணவு வகைகளின் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மேலும், மருத்துவமனை வளாகம் போன்ற பொது இடங்களில் ஆரோக்கியமான சிறுதானிய உணவு வகைகள் கிடைப்பதை ஊக்குவிக்கப்படும்.

# XVI - சுகாதார மருத்துவ மேலாண்மை சேவைகள்

**95. தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககம் வருங்காலங்களில் " மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம்" என்ற பெயரில் செயல்படும்.**

தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககம் தற்போது 36 மருத்துவக் கல்லூரி மற்றும் அதனை சார்ந்த மருத்துவமனைகளுடன் இயங்கி வருகிறது. மருத்துவ ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக மருத்துவக்கல்வி இயக்ககம் " மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம்" என்ற பெயரில் செயல்படும்.

**96. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருந்துகள் தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதிசெய்வதை மாநில அளவில் கண்காணிக்கப்படும்.**

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருந்துகள் தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதிசெய்வதை கண்காணிப்பதற்காக, மருந்து மேலாண்மை கண்காணிப்பு அமைப்பு நடப்பாண்டில் உருவாக்கப்படும்.

97. பொது சுகாதாரத் துறையில் மின் அலுவலக முறை செயல்படுத்தப்படும். மேலும் பள்ளிகளுக்கு சுகாதார சான்றிதழ் (Sanitary Certificate) இணையதளம் மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அரசு ஆரம்ப சுகாதார மற்றும் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சிறப்பு மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனை கிடைத்திடும் வகையில் தொலை மருத்துவ சேவை (Tele Consultation) வழங்கப்படும்.

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை மின்-அலுவலகத்தைத் திட்டமிட்டு செயல்படுத்தத் தொடங்கி உள்ளது. இந்த மின் அலுவலக முறையானது (e-office) தற்பொழுது 45 சுகாதார மாவட்ட அளவிலும், 385 வட்டார அளவிலும் விரிவுபடுத்தப்படும். மேலும், தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளுக்கு சுகாதார சான்றிதழ் (Sanitary Certificate) இணையதளம் மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கடைகோடி மனிதனுக்கும் சிறப்பு மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனை கிடைத்திடும் வகையில் அரசு ஆரம்ப சுகாதார மற்றும் அரசு மருத்துவமனைகளில் தொலை மருத்துவ சேவை (Tele Consultation) வழங்கப்படும்.

**98. செங்கல்பட்டு மாவட்டத்தில் மருந்துகள் கட்டுப்பாட்டிற்கான புதிய மண்டலம் உருவாக்கப்படும்.**

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக மருந்துகள் கட்டுப்பாட்டுத் துறையின் காஞ்சிபுரம் மண்டலத்தை இரண்டாக பிரித்து செங்கல்பட்டு மாவட்டத்திற்கென புதிதாக மருந்துகள் கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் அலுவலகம் உருவாக்கப்படும்.

99. தமிழ்நாட்டில் மருத்துவ ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் விதமாக "பன்னாட்டு மருத்துவ மாநாடு" நடத்தப்படும். மேலும், நடப்பாண்டின் பொது சுகாதார வருடாந்திர மாநாட்டின் போது (Annual Public Health Conference) 100 திறனாய்வு கட்டுரைகள் வெளியிடப்படும்.

சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கிவரும் சேவையை வலுப்படுத்தவும், மருத்துவ ஆய்வு கட்டுரைகளை பற்றி விவாதிக்கவும் "பன்னாட்டு மருத்துவ மாநாடு" நடத்தப்படும். பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் வண்ணம் நடப்பாண்டின் பொது சுகாதார வருடாந்திர மாநாட்டின் போது (Annual Public Health Conference) 100 திறனாய்வு கட்டுரைகள் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**100. தமிழ்நாட்டில் சுகாதாரத் துறை வாகனங்களின் பராமரிப்பினை மேம்படுத்தும் வகையில் ஏழு இடங்களில் "புதிய சிறு பணிமனைகள்" தொடங்கப்படும்.**

தமிழ்நாட்டில் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையை சார்ந்த வாகனங்கள் தங்குதடையின்றி செயல்பட காலமுறை பராமரிப்பு பணிகள் தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து துறையை சார்ந்த 29 நடமாடும் பணிமனை குழுக்கள் மற்றும் 4 சிறுபணிமனைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பராமரிப்பு பணிகளை மேலும் துரிதபடுத்தும் விதமாக துறைக்கு பூவிருந்தமல்லி, திருப்பத்தூர். கள்ளக்குறிச்சி, ஆத்தூர், திருப்பூர், கரூர் மற்றும் சிவகாசி ஆகிய 7 இடங்களில் கூடுதலாக புதிய சிறு பணிமனைகள் தொடங்கப்படும்.

**101. மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு துறை சார்ந்த சுகாதார வாகனங்களில் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் வகையில் "வாகன தணிக்கை" (Vehicle Audit) மேற்கொள்ளப்படும்.**

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையில் உள்ள சுமார் 3000 வாகனங்களின் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தவும், அவை அரசு நிர்ணயித்துள்ள அனைத்து விதிமுறைகளுக்கு உட்படுவதை உறுதி செய்யவும், தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து துறையால் அனைத்து வாகனங்களிலும் வாகன தணிக்கை (Vehicle Audit) மேற்கொள்ளப்படும்.

**102. " தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம்" மூலம் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த 4133 காலிப் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர்.**

" தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம்" மூலம் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த 4133 காலிப் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர்.

# XVII - சுகாதார விழிப்புணர்வு சேவைகள்

## மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முழு உடல் பரிசோதனை

**103. மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய முழு உடல் பரிசோதனை மையம் அமைக்கப்படும்.**

சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய முழு உடல் பரிசோதனை மையம் அமைக்கப்படும்.

104. தமிழ்நாட்டிலுள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சியில் பணிபுரியும் 60,587 நகர்ப்புற " தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு முகாம்கள்" நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் நடத்தப்படுவதுடன், ஒவ்வொரு தூய்மைப் பணியாளருக்கும் வருடத்திற்கு ஒருமுறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் " முழு உடல் பரிசோதனை" நடத்தப்படும்.

தமிழ்நாட்டில் நகர்ப்புறத்தின் சுற்றுப்புற சுகாதாரத்தை பேணும் உன்னத பணியில் 60,587 நகர்ப்புற தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நீண்ட நேரம் கடுமையான பளு சுமந்து பணி செய்யும் இப்பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் அவர்களுடைய உடல்நலம் காக்க இரத்த சோகை, தோல் பிரச்சனைகள், நீரிழிவு நோய் உள்ளிட்ட தொற்றா நோய்கள், எலும்பியல் நோய்கள், கண் நோய்கள், பற்சிதைவு, குடல் மற்றும் கருப்பை இறக்கம் மற்றும் மனச்சோர்வு போன்ற பல்வேறு நோய்களை கண்டறிய நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

மேலும் வருடம் ஒரு முறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் "முழு உடல் பரிசோதனையும்" நடத்தப்படும்.

**105. "நடப்போம் நலம் பெறுவோம்" எனும் நோக்கில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 8 கிலோ மீட்டர் தூரம் கொண்ட நடைபாதைகள் கண்டறியப்பட்டு பிரதி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று நலவாழ்வு பேணுவதற்கான நடைபயிற்சியை (Health Walk) ஊக்குவிக்கும் வகையில் நடைபாதைகள் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து உருவாக்கப்படும்**

உலக சுகாதார அமைப்பின் தரவுகள்படி உடற்பயிற்சி செய்வது நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்களின் தாக்கத்தை 27 சதவீதமும், இதய நோயின் தாக்கத்தை 30 சதவீதமும் குறைக்கின்றது என்று அறியப்படுகிறது. நடைபயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சனைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது. ஆகவே "நடப்போம் நலம் பெறுவோம்" என்பதற்கிணங்க பொது மக்களின் நலன் மற்றும் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு, அனைத்து மாவட்டங்களில் உள்ள

உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து 8 கி.மீ தூரம் கொண்ட நடைபாதை கண்டறிந்து, ஆரோக்கியமான நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதைகள் ஏற்படுத்தப்படும். இதன் அடிப்படையில் அனைவரும் தினந்தோறும் நடைபயிற்சி மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவதோடு ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் மக்களுடன் இணைந்து மாவட்ட அலுவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகிய அனைவரும் "சுகாதார நடைபயிற்சியில்" பங்கேற்பார்கள். நடைபயிற்சியின் முடிவில் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

**திரு. மா. சுப்பிரமணியன்**

மருத்துவம் மற்றும் மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர்